**செய்தி குறிப்பு** **நாள்: 18.10.2023**

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சென்னைப் பெருநகர பகுதிக்கான மூன்றாம் முழுமைத் திட்ட தொலைநோக்கு ஆவணத் தயாரிப்பிற்காக அரசு துறை உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார் வல்லுநர்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பெறுவதற்கான ஒரு நாள் கருத்தரங்கம்**

******

இன்று (18.10.2023) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சென்னை தாஜ் கன்னிமரா ஹோட்டலில் சென்னைப் பெருநகர பகுதிக்கான மூன்றாம் முழுமைத் திட்ட தொலைநோக்கு ஆவணத் தயாரிப்பின் ஒரு பகுதியாக நகர்ப்புற வளர்ச்சி, வீட்டுவசதி, போக்குவரவு மற்றும் போக்குவரத்து (Sectoral Workshop on Urban Growth, Housing, Traffic and Transportation) குறித்து அரசு துறை உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார் வல்லுநர்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பெறுவதற்கான ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

சென்னைப் பெருநகரின் மூன்றாவது முழுமை திட்டத்திற்காக பொது மக்களிடமிருந்து கருத்து கேட்கும் பணி நடைபெற்று, 40,362 கருத்துக்கள் பெறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மூன்றாம் முழுமைத் திட்ட தொலைநோக்கு ஆவணத் தயாரிப்பின் ஒரு பகுதியாக துறைச்சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் வல்லுநர்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பெறுவதற்கான ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் போக்குவரத்து துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் .ஜெ .ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர காவல் போக்குவரத்து கூடுதல் ஆணையர் திரு.ர.சுதாகர் இ.கா.ப., அவர்கள், சென்னை பெருநகர மாநகராட்சி கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி. இரா.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் கீ.சு.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், போக்குவரத்து ஆணையர் திரு.அ. சண்முக சுந்தரம், இ.ஆ.ப., அவர்கள், மாநகர போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு.செ.சரவணன் இ.ஆ.ப., அவர்கள், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணைய (CUMTA) சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள், சென்னை பெருநகர காவல் போக்குவரத்து துணை ஆணையர் (கிழக்கு) திரு சமய் சிங் மீனா, இ.கா.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ. உயர் அலுவலர்கள், பல்வேறு துறை அலுவலர்கள், உலக வங்கி பிரதிநிதிகள், லீ அஸோஸியேட் சவுத் ஆசியா பிரைவேட் லிமிடெட் மற்றும் எல்&டி நிறுவன கலந்தாலோசகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.